**டிசம்பர் - 26**

**"மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு." (தைரியமாயிரு) - யோசு 1.7.**

நீங்கள் திடன்கொண்டு தைரியமாயிருங்கள். தைரியத்தில் வித்தியாசமான வகைகள் உண்டு. ஒருவகை சுயநலத்திலும் தன்னம்பிக்கையிலும் உண்டாகிறது. மற்றொருவகை, நிலைமையின் கஷ்டங்களை கருதத் தவறிப்போகிற அசட்டுத் துணிவில் உண்டாகிறது. ஆனால் கர்த்தர் நமக்குப் புகட்டுகிறதும், எல்லா ஆவியின் பிரகாரமான இஸ்ரவேலரும் பெற்றிருக்க நாடுகிறதும் என்னவென்றால், நிதானமாகவும், சாந்தமாகவும் வழியில் உண்டாகிற சோதனைகளையும், கஷ்டங்களையும் கண்டுகொள்ளும் பொழுதும், அத்தருணத்தில் சமாளிக்க நமக்குள்ள தைரியத்தின் போதாத நிலையைத் தாழ்மையுடன் உணர்ந்து கொள்ளும்பொழுது, கர்த்தரிலுள்ள விசுவாசத்தினால் தாங்கப்படுகிற தைரியம், அதாவது கர்த்தரிலும் அவருடைய வல்லமையிலும் அவர்களைத் திடமுள்ளவர்களாக்க சாத்தியமாக்குகிற தெய்வீக வாக்குத்தத்தங்களில் கொண்டுள்ள ஒரு நம்பிக்கை.
**- Z 02, 285 (R 3709).**

தைரியமான பலம் சரீர சம்பந்தமான சக்தியையும், தைரியத்தையும் மாத்திரம் குறிக்கிறதில்லை, ஆனால் அது தேவனிடத்தில் விசுவாச வெற்றிக்காகவுள்ள நம்பிக்கை, தெய்வீகத்தத்துவங்களில் மகிழ்ச்சியும், கீழ்ப்படிதலும் ஆகிய இவைகளில் பிறக்கிற மனதிற்குரிய, நீதிநெறிக்குரிய பக்தி சம்பந்தமான சக்தியையும், தைரியத்தையும் கூடக் குறிக்கிறது. ஆகையால் தன்னடக்கம், பொறுமை, துணிவு ஆகிய இவைகளைக் கொண்டதாயிருக்கிறது. நாம் வசித்துக் கொண்டிருக்கிற தாறுமாறான (பொருந்தாத) காலங்கள் காரணமாகவும், தேவன் சார்பாகவும், கிறிஸ்து சார்பாகவும், சத்தியத்தின் சார்பாகவும், சபையின் சார்பாகவும், உலகத்தின் சார்பாகவும், சம்பந்தப்பட்டிருக்கிற பிரச்சனைகள் காரணமாகவும், நம்மை எதிர்க்கிற தத்துவ சம்பந்தமான விரோதிகளான தப்பான உபதேசங்கள், பாவம், தன்னையம், உலகத்தனமும், ஆள்சம்பந்தமான விரோதிகளான சாத்தான், தான், உலகம் இவைகளின் காரணமாகவும், தைரியமான பலம் நமக்கு அவசியமாயிருக்கிறது. இப்படிப்பட்ட தைரியமான பலத்தை சோம்பேறியாக இருந்துகொண்டோ, அல்லது வெறும் அடைய வேண்டும் என்று விரும்பிக்கொண்டோ, இருக்கிறதினாலோ, விருத்தி செய்ய முடியாது. சிறியதும், பெரியதுமான நம்முடைய அன்றாட அனுபவங்கள், முரண்பாடுகள் மத்தியில் உண்மையோடு கர்த்தரின் ஆவி, வார்த்தை, பராமரிப்புகள் ஆகிய இவைகளைப் பயன்படுத்தாமல் வேறு எந்த வழியிலும் அதை அடைய முடியாது! **- P 35, 172.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**யோசு 1.5-9, உபா 5.32,33, 31.7,8, ஏசா 35.4, 41.10-14, ரோம 8.31,37, 1கொரி 16.13, எபே 6.10-16, சங் 27.1, 46.1,7, 119.42, நீதி 2.7, நியா 6.14.**

**கோபுர வாசிப்பு : Z 15, 179 (R 5705).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் பெலமும் தைரியமும் உள்ளவனாயிருந்தேனா? ஏன்? எங்கு? உதவியாயிருந்ததும் இடையூறாயிருந்ததும் எது? பலன்கள் எவை?**